தண்ணீர் பற்றிய ஆய்வுகளில் இறங்க ஆரம்பித்தேன்.

இணையங்களில் தேடிபார்த்த போது, '100 சதம் தூய தண்ணீருக் கான ஆய்வுகள் இதுவரையில் நடத்தப்படவில்லை' என்கிற விஷயம் தெரியவந்தது.

இதையடுத்து இந்தியாவில் முதலா வதாக 'அகஸ்தியா பி.எச்-7 தண் ணீரை' கண்டுபிடித்து, அர்ப்பணிக்கும் எனக்கான முயற்சிகள், எக்ஸ்பிரஸ் வேகம் பெற்றன.

இதில் முதல்கட்டமாக அமெரிக்கா போப் பாரமவுண்ட் தொழில் நுட்ப பல்கலை கழகத்தில் 'டிஸ்கவரி ஆப் டிஸ்டில்லர் வாட்டர் பார் ஹியூமன் நேச்சர்- 21 செஞ் சுரி' என்கிற தலைப்பில் ஆய்வு பணிகளை ஆரம்பித்தேன்.

இதற்காக அங்குள்ள லைப்ரரிகளில், தண்ணீரின் மகிமைகளை தேடி, ராப்பகலாக அலைந்து-திரிந்து, கட்டுரைகளை தயார் செய்தேன்.

அப்போதுதான் 'உலகில் உள்ள 95 சதவீத நோய்களுக்கு நேரடி-மறைமுக காரணம், தண்ணீர் தான்' என்கிற விவரம் எனக்கு தெரியவந்தது. இது எனக்கு அகஸ்தியா கருவியை கண்டுபிடிப்பதில் பெரிதும் உறுதுணையாக இருந்தது" என்கிற டாக்டர் சிவா, குழாய் தண்ணீரை ஒரு கண்ணாடி தம்ளரில் நிரப்பி, இதில் 'பல்ப் டெஸ்ட்' சாதனத்தை பொருத்தித்தார். அடுத்த நிமிடமே, பல்பு எரிந்தது.

"தண்ணீரில் தூசு-துரும்புகள், கண்ணுக்கு தெரியாத கிருமிகள் இருந்தால்தான், மூலக்கூறுகளின் அசைவு காரணமாக, மின்னூட்டம் தூண்டப்பட்டு, இப்படி பல்பு எரியும்."

என்கிற சிவா, அதே தண்ணீரை 'அகஸ்தியா சாதனத்தில் ஊற்றி, மின்சார சுவிட்சை 'ஆன்' செய்தார்.

"குழாய் தண்ணீர் குறைந்தபட்சம் 4 மணிநேரத்துக்கு பிறகுதான், தூய தண்ணீராக உருமாறும். அதுவரையில் நாம் மற்ற விஷயங்களை பேசிக்கொண்டு இருப்போமே?" என்ற சிவகுமாரன், அடுத்தபடியாக சொன்னது, தண்ணீரின் ஆரோக்கியம் பற்றி!

"நமக்கு தண்ணீர்-தலையாய உணவு. நாம் சாப்பிடும் உணவின் சாரம்-சத்துக்களை கரைத்து, குடலுறிஞ் சிகளுக்கு உட்கிரகிக்க தந்து, வளர்சிதை மாற்றத்தை உறுதிசெய்வது.

உடலின் உள்ளுறுப்புகளில் தேங்கி நிற்கும் அசுத்த-விஷ கழிவுகளை நீக்குவது ஆகிய பெரும் பணிகள், தண்ணீருக்கானது. அதுவே விஷமாகி போனால், உடம்புக்கு நோய் வராமல் என்ன செய்யும்?

ஜப்பானிய பல்கலைகழகம் ஒன்று, 'காற்று, நீர் மாசுபாடு காரணமாக தாய்ப்பாலும் பாதிக்கப்பட்டு இருப்பதாக, உறுதிபடுத்தப்பட்ட தகவலின்பேரில், தாய்ப்பால் பரிசோதனை நடத்தியது. இது தமிழகத்தில் சென்னை, சிதம்பரம், பரங்கிப்பேட்டை ஆகிய பகுதிகளிலும் நடத்தப்பட்டது.

இதன்வாயிலாக 'பூச்சிக்கொல்லி மருந்துகள், பாதரசம், காரியம் உள்ளிட்ட அம்சங்கள், தாய்ப்பாலில் மிகுந்து இருப்பது' தெரியவந்தது.

இவை மனிதஉடலுக்கு பெருந்தீங்கு விளைவிப்பவை. இதனால்தான் பிறந்த குழந்தைக்கும் மாரடைப்பு, கிட்னி பிரச்சினை, புற்றுநோய் ஆகியவை வருகின்றன" என்கிற சிவகுமாரனின் முகத்தில்

## குடிநீரில் விஷம்... மத்திய அரசு ஒப்புதல்!



நாட்டின் பெரும்பான்மையான பகுதிகளில் நிலத்தடி நீர் விஷமாகிவருவதை நாடாளுமன்றத்திலேயே ஒப்புக்கொண்டு இருக்கிறது இந்திய அரசு.

மண்ணில் இரும்பு, அமோனியம், மாங்கனீஸ், மெக்னீசியம், சல்பேட், சல்பைடு, தாமிரம், துத்தநாகம், குளோரைடு, புளோரைடு, பேரியம், கால்சியம், செலினியம் போன்றவை, அந்தந்த மண்ணின் இயல்புக்கு ஏற்ப கலந்து இருக்கும்.

இதற்கென ஒரு வரையறை உண்டு. அதாவது, ஒரு லிட்டர் தண்ணீரில், பாதரசம் 0.001 மில்லி கிராம் இருக்கலாம்; ஈயம் 0.1 மில்லி கிராம் இருக்கலாம். ஆனால், இந்த வரையரையைத் தாண்டும்போது, அந்த தண்ணீர் குடிக்க தகுதியற்றதாக மாறிவிடும்.

இதை நீங்கள் அருந்தும்போது, அந்தத் தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக உடல் உறுப்புகளை சிதைத்து, கொல்லும் விஷமாக மாறிவிடும்.

அப்படி விஷமாகிவருவதைதான் நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டு உள்ளது, மத்தியஅரசு.

மத்திய நீர்வள அமைச்சக அறிக்கையின்படி, நாட்டின் 385 மாவட்டங்களில் உள்ள நிலத்தடி நீரில் நைட்ரேட் மிகுந்து காணப்படுகிறது. 267 மாவட்டங்களில் புளோரைடு அதிகம். 158 மாவட்டங்களில் தண்ணீர் உப்பாகவே மாறிவிட்டது.

63 மாவட்டங்களில் உள்ள தண்ணீரில் துத்தநாகம், குரோமியம், காட்மியம் போன்ற உலோகங்கள் அதிகமாம்!




## 'என் இளமை ரகசியம்'
### – நடிகர் ராஜேஷ் பரவசம்!

"எனக்கு கடந்த 10 ஆண்டுகள் முன்பு அதிகப்படியான வேலைப்பளு-பதட்டம் காரணமாக சர்க்கரைநோய் வந்தது.

அப்போதில் இருந்தே உணவு-தூசி அலர்ஜி, செரிமானகோளாறால் அவதிப்பட்டேன். இதுபோக நான் கொஞ்சம் முன்கோபி என்பதால், எனக்கு ரத்தஅழுத்த உபாதையும் இருந்தது.

கடந்த 2010, மார்ச் மாதம் டாக்டர் சிவகுமாரனின் அகஸ்தியா நியூட்ரல் பி.எச்.வாட்டர் பற்றி கேள்விப்பட்டு, அந்த மிஷினை வாங்கி, கடந்த 2 ஆண்டுகளாக உபயோகித்து, தண்ணீர் அருந்திவருகிறேன்.

இதில் எனக்கு சர்க்கரை நோய் கட்டுக்குள் வந்தது. உணவு-தூசி அலர்ஜி, செரிமானகோளாறு நீங்கியது. முன்கோபம் குறைந்து உள்ளது. முடி அடர்த்தியாக வளருகிறது. நேரா-நேரத்துக்கு பசி எடுக்கிறது. நிம்மதியாக தூங்குகிறேன். முன்புமாதிரி சோர்வு-தளர்ச்சி இல்லை. நான் 15 ஆண்டுகளுக்கு முன்பு எப்படியிருந்தேனோ, அந்த இளமை, எனக்கு திரும்ப கிடைத்திருக்கிறது. சருமத்தில் நிறம் மெருகேறி உள்ளது.

நோய்-நொடிகள் அகன்றதால், 50 சதம் மருந்து-மாத்திரைகளை குறைத்துவிட்டேன். சுருக்கமாக சொல்லப்போனால், பல்லாண்டு யோகா செய்தால் என்ன பலன்கள் கிடைக்குமோ, அப்படியொரு ஆரோக்கியத்தை, நான் இந்த 2 ஆண்டுகளிலேயே பெற்று விட்டேன்.

டாக்டர் சிவகுமாரனுக்கு நன்றி!

